**புதுவை அரசு போக்குவரத்துத் துறை**
**அரசு வாகன பணிமனை**
**சாரம், புதுச்சேரி**

---

**பயன்பாட்டில் இல்லாத பழைய அரசு வாகனங்களை ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்**

1. இந்திய குடியரசு தலைவர் சார்பாக, பழைய பயன்பாட்டில் இல்லாத புதுவை அரசின் பல துறைகளுக்கு சொந்தமான கண்டனம் செய்யப்பட்ட வாகனங்கள் மின் அனு ஏலம் நிகர்நிலை இணையதளம் https://eauction.gov.in மூலமாக 16.02.2021 காலை 10.00 மணி முதல் 19.02.2021 மாலை 5.00 மணி வரை சேவையகத்தின் தானாக நீட்டிப்பு வசதியுடன் ஏலம் நடத்தப்படுகிறது.

2. விண்ணப்ப படிவம், வாகனங்களின் விபரம், விண்ணப்ப கட்டண விவரம் மற்றும் ஏல நிபந்தனைகள் வரும் 01.02.2021 தேதி 10.00 மணி முதல் https://eauction.gov.in மற்றும் https://transport.py.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.315/- (GST உள்ளடங்கியது) தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக **Drawing and Disbursing Officer, Government Automobile Workshop, Puducherry** என்று குறிப்பிட்டு புதுச்சேரியில் செலுத்தத்தக்க கேட்பு வரைவு ஓலை ஒன்று (Demand Draft) சமர்பித்து விண்ணப்பப்படிவத்தைப் பெற வேண்டும். விண்ணப்பப் படிவத் தொகை திரும்பப் பெறத் தக்கதல்ல.

4. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள், மேற்கண்ட துறையால் வரையறுக்கப்பட்ட கட்டாய முன் வைப்புத்தொகை (EMD) ஒவ்வொரு கனரக வாகனத்திற்கும், நான்கு சக்கர வாகனத்திற்கும், இரண்டு சக்கர வாகனத்திற்கும் (புல்லட்) மற்றும் இதர இரண்டு சக்கர வாகனத்திற்கும் இணைப்பு-Iல் (Annexure-I) கண்டுள்ளபடி தனித்தனியாக கேட்பு வரைவு ஓலையை புதுச்சேரியில் செலுத்தத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக (Demand Draft) **Drawing and Disbursing Officer, Government Automobile Workshop, Puducherry-13** என்று குறிப்பிட்டு எடுத்து ஏல விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஏலம் கேட்க விருப்பம் உள்ளவர்கள், வரும் 12.02.2021 மாலை 4.00 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்பாகவோ துறையால் வரையறுக்கப்பட்டத் தொகையுடன் கூடிய பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தையும் மற்றும் கட்டாய முன் வைப்புத் தொகைக்கான

வரைவு கேட்பு ஓலையும் (Earnest Money Deposit) மற்றும் முகவரி அத்தாட்சியுடன் https://eauction.gov.in இணையதளத்தின் வழியாக பதிவேற்றம் செய்த பின் அதன் அசலை அரசு பணிமனை அலுவலகம், போக்குவரத்து துறை,
சாரம், புதுவையில் செலுத்திய பின் ஏலம் கேட்பவருக்கு மின்னனு ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

6. வரையறுக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் எந்த ஏலதாரர் **ஆவணங்களை நேரிலும் இணையத்திலும் பதிவேற்றம் செய்கிறாரோ அவருக்கு மட்டும் மின்னனு ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதி அளிக்கப்படும்.** பங்கு கொள்ளும் ஏலதாரர் தெளிவான முகவரி மற்றும் தகவல் தொடர்பு எண்ணை கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இணையத்தின் வழியாக சமர்ப்பிக்க வேண்டும்.

7. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரி பார்ப்புக்கு பின்னரே ஏலதாரர் அலுவலகம் அனுமதித்தபின் மின்னனு ஏலத்தில் பங்கு கொள்ள இயலும்.

8. ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அவசியம் ஒரு டிஜிட்டல் கையொப்பம் பெற்று இருக்க வேண்டும். டிஜிட்டல் கையொப்பம் பெற்று ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்களுக்கு அதற்குண்டான கணிணி வழியே பங்குகொள்வதற்கான சிறப்பு பயிற்சியை புதுச்சேரி தலைமை செயலகத்தில் உள்ள மின்கொள்முதல் பிரிவு (e-procurement cell) மூலம் பயிற்சி எடுத்துக்கொள்ளலாம். மேலும், அந்த அலுவலகத்தை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்: 0413 2220225/1800 233 7345 (கட்டணம் இல்லா சேவை)

9. கணிணி வழியாகவே (online) மூலம் ஏலம் நடத்தப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலத் தொகையை மேற்கூறிய இணைய தளத்தின் (online) வழியாகவே குறிப்பிட வேண்டும்.

10. ஏலம் கேட்பவர்கள், எந்த இடத்தில் இருந்தும் மேற்கண்ட ஏலத் தேதிகளில் குறிப்பிட்ட நேரத்தில் மேற்கூறிய இணைய தளத்தின் வழியாக அவர்களுடைய டிஜிட்டல் கையொப்பத்தின் உதவியுடன் கூடிய பயன்படுத்துவோருடைய பெயர் மற்றும் கடவுச்சொல் வழியே ஏலத் தொகையை குறிப்பிடலாம். ஏலத் தொகையை குறிப்பிடும் நபரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்படும். ஏலத்தொகை மட்டுமே காட்டப்படும்.

11. ஏலம் கேட்பவர், இணைப்பு-I-ல் (Annexure-I) கொடுக்கப்பட்டுள்ள ஆரம்ப விலைக்கு மேல் தன்னுடைய ஏலத்தொகையை குறிப்பிட வேண்டும்.

12. ஒவ்வொரு கேட்பு ஏலமும் கனரக / இலகுரக வாகனத்திற்கு ஆரம்ப தொகையின் மேல் ரூ.500/- மடங்கிலும், இருசக்கர வாகனத்திற்கு ஆரம்ப தொகையின் மேல் ரூ.100/- மடங்கிலும் இருக்கவேண்டும்.

13. அதிகபட்ச கேட்புத்தொகையை துணை போக்குவரத்து ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் ( பொறுப்பு), போக்குவரத்துத்துறை, புதுச்சேரி அவர்கள் ஏற்றுக்கொள்வார். மின்னனு ஏலம் முடிவில் வெற்றிப்பெற்ற ஏலதாரருக்குத் தகவல் தெரிவிக்கப்படும்.

14. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு கட்டாய வைப்புத்தொக்கைகான அவர்களுடைய வரைவு காசோலையை மறுநாள் திருப்பித்தரப்படும். ஏலத்தில் வெற்றி பெறும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய முழுத் தொகையில் கட்டாய முன் வைப்பு தொகையை (EMD) சரி செய்து மீதித் தொகையை செலுத்த வேண்டும்.

15. வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகை முழுவதையும் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறும் பட்சத்தில் அவருடைய கட்டாய முன் வைப்பு தொகைக்கான (EMD) வரைவு ஓலையை இழக்க நேரிடும். மேலும், அவருக்கு அடுத்தப்படியாக உள்ள ஏலதாரருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட ஏலதாரர், மூன்று நாட்களுக்குள் அந்த முதல் ஏலதாரர் வெற்றி பெற்ற ஏலத்தொகையை, முன் வைப்புத் தொகையை (EMD) சரி செய்து மீதித் தொகை முழுவதையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்.

16. ஏலத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் வேறு ஒருவரை அங்கீகரிக்கவோ அல்லது வாங்கும் வாகனத்தை வேறு ஒருவருக்கோ மாற்ற உரிமை கிடையாது. வாகனத்தை கொண்டு செல்லும் போது, ஏலதாரர் முன்னின்று சம்பந்தப்பட்ட எல்லா படிவங்களையும் கையெழுத்திட்டு துறையின் வாயில் அனுமதிச் சீட்டு பெற வேண்டும். ஏலம் முடிவு செய்யப்பட்ட பின், அந்த வாகனங்களின் பாதுகாப்பிற்கோ (அ) மற்ற இழப்பிற்கோ துறை / அலுவலகம் பொறுப்பேற்காது.

17. வெற்றி பெற்ற ஏலதாரர் அந்த வாகனங்களை ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் தன் சொந்த செலவில் எடுத்துச் செல்ல வேண்டும்.

18. வாகனங்களின் நிலை மற்றும் மதிப்பீடு குறித்த கோரிக்கை ஏதும் ஏலம் முடிவுற்றபின் ஏற்கபடமாட்டாது.

19. ஏலத்தில் எடுக்கப்படும் தொகையுடன் சேர்த்து நிரிணயிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரியும் வண்டிகளின் தன்மைக்கு ஏற்ப சேர்த்து வசூலிக்கப்படும். மேலும், அரசால் புதிதாக வேறு ஏதேனும் வரி விதிக்கப்பட்டாலும் அல்லது இருக்கும் வரியில் மேலும் கூடுதலாக உயர்த்தப்பட்டாலும் ஏலத்தில் வெற்றி பெற்றவர்கள் அந்த தொகையினை செலுத்த வேண்டும்.

20. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் இணைப்பு-Iல் (Annexure-I) குறிப்பிட்டுள்ளபடி வாகனங்களை அரசு அலுவலக நேரத்தில் அந்தந்த துறையின் அனுமதியுடன் 01.02.2021 முதல் 19.02.2021 வரை பார்வையிடலாம்.

21. ஏலம் சம்மந்தமாக ஏதாவது தேவைப்படும் திருத்தம் சம்மந்தப்பட்ட துறையால் செய்யப்பட்டால், ஏலதாரர் தங்களது ஆவனங்களை சமர்ப்பிக்குமுன் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

22. மேற்கண்டவற்றில் சர்ச்சை ஏதேனும் ஏற்பட்டால், துணை போக்குவரத்து ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (பொறுப்பு) அரசு பணிமனை, போக்குவரத்துத் துறை, புதுச்சேரி அவர்களின் முடிவே இறுதியானது.

23. எவ்வித காரணமின்றி ஏலத்தை ஏற்கவோ அல்லது மறுக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ துணை போக்குவரத்து ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (பொறுப்பு), போக்குவரத்துத் துறை, அவர்களுக்கு உரிமை உள்ளது.

24. மேற்கண்ட ஏலம் சம்மந்தமான எந்த ஒரு பிரச்சனைக்குண்டான வழக்கும் புதுவை மாநில நீதி மன்றத்திற்கு மட்டுமே உட்பட்டதாகும்.

**துணை போக்குவரத்து ஆணையர்**
**மற்றும் செயற்பொறியாளர்(பொறுப்பு)**